R.Dis No:579/2023
Title Code No:TNTAM/24651

# திரை மொழி


THIRAI MOZHI TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

| மலர் : 01 | இதழ் : 07 | பிப்ரவரி - 2024 | பக்கம்: 8 | விலை: ரூ. 10 |
|---|---|---|---|---|
| Volume : 01 | Issue : 07 | February - 2024 | Page: 8 | Price: Rs. 10 |


திரைமொழியில் காதல்மொழி Page 5
உயர்ந்த மனிதர் எங்க இயக்குநர் Page 3
ஏ.ஐ.யில் குரல் குளோனிங் Page 7



## "இயக்குநர் இதயமும்", "நம்ம செக்கனும்"



**1999, ஆலப்புழா, கேரளா.**

மோகன்லாலின் உஸ்தாத், திலீபன் பஞ்சாபி ஹவுஸ், சுரேஷ் கோபியின் எஃப்.ஐ.ஆர், போன்ற படங்கள் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கும் போது, ஆலப்புழாவின் அப்பாஸ் தியேட்டரில் ஒரு தமிழ் திரைப்படம் வெளியாகி இருந்தது.

"எப்பவுமே மலையாள படம் தானே உங்க தியேட்டர்ல ஓடும்.. இப்ப என்ன புதுசா தமிழ் படம் ரிலீஸ் பண்ணி இருக்கீங்க? படம் ஓடுமா?" என்று அந்த தியேட்டர் ஓனரிடம் நண்பர்கள் கேட்க, அதற்கு அவர், "படம் ஓடுதோ இல்லையோ, இந்த படத்துல வர ஒரு பாட்டு என்ன ரொம்ப கவர்ந்துச்சு. அதனால இந்த படத்தை நான் போட்டு இருக்கேன்னு" சொன்னாராம்.

நண்பர்களின் அனுமானத்தின் படியே தியேட்டரில் முதல் நாள் கூட்டம் மிகக் குறைவு. அடுத்தடுத்த நாட்களில் அப்பாஸ் தியேட்டரில் ஹவுஸ் ஃபுல் போடும் அளவுக்கு ரசிகர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. அங்கே பற்றவைத்த நெருப்பு கேரளா முழுக்க பரவியது.

கேரளாவில் பல தியேட்டர்களில் அந்த படம் ரிலீஸ் செய்யப்பட்டது. அந்தப் படத்தின் நாயகன் **நம்மச் செக்கன்** என்று அன்போடு அங்கு உள்ளவர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டார்.

அன்று கேரளா மக்கள் மனதில் இடம் பிடித்த அந்த நாயகன் வேறு யாருமல்ல... நம்ம **தளபதி விஜய்** அவர்கள் தான். அப்படி போற்றப் பட்ட படத்தின் இயக்குநர் தான் நம்ம **இயக்குநர் இதயம் (இது அவருக்கு திரைமொழி சூட்டும் மணிமகுடம்) திரு. எழில்** அவர்கள். அப்படி ஒரு படத்தை தயாரித்தவர் தான் சூப்பர் குட் பிலிம்ஸ் **ஆர். பி. சௌத்ரி** அவர்கள். அப்படி கொண்டாடப்பட்ட அந்தப் படம் தான் நம் தமிழ்நாட்டையும் ஒரு கலக்கு கலக்கிய **துள்ளாத மனமும் துள்ளும்.**

அந்த தியேட்டர் ஓனரின் மனதை கவர்ந்த அந்த பாடல் தான்... SA **ராஜ்குமார்** அவர்கள் இசையமைத்த **இன்னிசை பாடிவரும்...** என்று தொடங்கும் பாடல்.

இப்படியாக, கால் நூற்றாண்டாக தமிழ்திரைஉலகில்தடம்பதித்துவரும் இயக்குநர் திரு. எழில் அவர்களிடம், அவரின் திரைப்பயணம் பற்றியும், தற்பொழுது விமல் நடிப்பில் அவர் இயக்கி வரும் **தேசிங்கு ராஜா2** படம் வருவதையொட்டியும், திரை மொழி டாக்கீஸ் யூடியூப் தளத்திற்காகவும், திரைமொழி சினிமா இதழுக்காகவும், அவரிடம் நிகழ்த்திய உரையாடலின் ஒரு பகுதி இதோ உங்களுக்காக.

**கேள்வி:** அப்பா ஒரு மிலிட்டரி மேன்.. அவர் எப்படி நீங்க திரைத்துறைக்கு வர சம்மதிச்சாரு?

**பதில்:** நான் சென்னைக்கு வேலை தேடி வரும்போது வேற ஏதோ வேலையில இருக்குறதாதான் எங்க வீட்டுல நெனச்சுக்கிட்டு இருந்தாங்க... சினிமாவுல இருக்கிறது யாருக்கும் தெரியாது. என் நண்பன் ஆவடி அற்புதராஜ்க்கு மட்டும்தான் தெரியும். அப்புறம் ஒரு காலகட்டத்தில் எங்க அப்பாவுக்கு தெரிய வந்துச்சு. தெரியறதுக்கு முன்னாடி வரைக்கும் என்னைய ஆர்மில சேர்க்கணும்னுதான் எங்க அப்பா நெனச்சாரு.

**கேள்வி:** முதல் பட வாய்ப்பு எப்படி அமைஞ்சது?

**பதில்:** (புன்னகத்தை படி) ஒரு கம்பெனியில் பட பூஜைக்கு எல்லா ஏற்பாடும் பண்ணினாங்க.. நான் கூட அப்பா கிட்ட சொல்லி அவர கூட்டிகிட்டு வந்தேன். அடுத்த நாள் போய் பார்த்தா அந்த கம்பெனியே இல்லை. இப்படி ஒரு அஞ்சு கம்பெனியில பூஜை ன்னு சொல்லி எதுவுமே சரியா நடக்கல. இப்படி கஷ்டப்படுறானேன்னு எங்க அப்பா hopelessசா இருந்தாரு. ஆனா அம்மா தான் confidentடா இருந்தாங்க. அப்புறம் நான் படம் பண்ணினேன். **எனக்கு என்ன சந்தோசம்ன்னா... துள்ளாத மனம் துள்ளும் படத்தை பார்த்துட்டு அப்பாவும், அம்மாவும் ரொம்ப சந்தோஷப்பட்டாங்க.**

**கேள்வி:** நாவல்ல இருந்து எடுத்த அமுதே திரைப்படம் உங்களுக்கு எதிர்பார்த்த வெற்றியை கொடுக்கலையே?



**பதில்:** ஆமா... என்னோட ஜட்ஜ்மெண்ட் அதுல தப்பா போயிடுச்சு.. **என்ன மாதிரியான ஸ்கிரீன் ப்ளே ஒரு படத்துல இருக்கணும்னு ஒரு டைரக்டர் தான் முடிவு எடுக்கணுங்கிறது தெளிவா கத்துக் கிட்டேன்.**

**கேள்வி:** இதனோட அனுபவம் தான் நீங்க இயக்குன **வெள்ளைக்காரத்துரை** படத்திலிருந்து ஒரு மணி நேரம் பத்து நிமிஷம் கட் பண்ணி எடுத்துட்டு ரீசூட் பண்ணி னீங்கலாமே?

**பதில்:** ஆமாமா... படத்தோட ரிலீஸ் டேட் முடிவு பண்ணியாச்சு. அப்ப எல்லாரும் சேர்ந்து டபுள் பாசிட்டிவ் பாக்கும்போது எல்லாரும் நல்லா இருக்குன்னு சொன்னாங்க; எனக்கு *second off* பிடிக்கல. புரொடியூசர் கிட்ட சொன்னப்ப என் மேல நம்பிக்கை வச்சு அவரு ஒத்துக்கிட்டதால, உடனே ரெண்டு நாள்ல கதையில மாற்றம் பண்ணி, 2 கேமரா வச்சு பத்து பதினோரு நாள்ல ஷூட்டிங் முடிச்சு ரிலீஸ் டேட்டில் கரெக்டா ரிலீஸ் பண்ணிட்டோம். படம் நல்லா போச்சு.

**கேள்வி:** விமல வச்சு நீங்க இயக்குன தேசிங்குராஜா படம் ஹிட். இப்ப **தேசிங்கு ராஜா 2** அதே *Genre* தானா?

**பதில்:** அது வேற *pattern*; இதுவேற *pattern*. ஆனா, இரண்டுமே காமெடி படம் தான் **அதைவிட இதுல காமெடி சிறப்பா இருக்கும்.**

உங்கள் படங்களில் நடித்த நடிகர் நடிகைகள் இசையமைப்பாளர்கள் பற்றி ஒரிரு வார்த்தைகளில் கூற முடியுமா என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில்கள்




எனக்கு லைப் கொடுத்தவர். சவுத்ரி சார் *production* பண்ணினார். இவர் கதையை கேட்டு ஓகே சொன்னார் அந்த நாள் மறக்க முடியாது




*Glamour role*ல இருந்து என்னோட படத்துல நல்ல *changeover* கொடுத்தாங்க




அவர் அப்பவே பீக்ல இருந்தாரு. ஒரு படம் அல்ல.. ரெண்டு படம் வாய்ப்பு கொடுத்தார். *Innocent*டான ரொம்ப ஆத்மார்த்தமான ஒரு மனிதர்.




ரொம்ப *dedicated; involvement* டோட பண்ணுவாங்க




வியந்து பார்த்த ஒரு மனிதர்.




பீக்ல இருந்தாலும் நான் சொன்னதை கேட்டு ஒரு கேரக்டர் *role* பண்ணி கொடுத்தாரு ரொம்ப நல்ல மனிதர்




ரொம்ப கூல். எனது பிரதர் மாதிரி




ரொம்ப காமெடி பண்ணுவார்.. *down to earth personality*




டே & நைட் *shoot* வச்சு ரொம்ப படுத்தினாலும், கிடைச்ச இடத்தில படுத்து தூங்கி எழுந்து, ஒத்துழைப்பு கொடுத்து நடிச்சு கொடுத்தார் சின்சியரான மனிதர்.




ரொம்ப அற்புதமான மனிதர்




ரொம்ப *dedicated* ஆர்டிஸ்ட்




ரொம்ப ஜாலி கூல்




சார் கிட்ட வொர்க் பண்ண முகவரிதான் எனக்கு பட வாய்ப்பு வாங்கித் தந்தது உச்சபட்ச அறிவு.




தீபாவளி படத்துல சின்ன கேரக்டர் தந்தேன். மீன் வித்துட்டு வர கேரக்டர். ரொம்ப அற்புதமா பண்ணி னார். அப்பவே எனக்கு தெரிஞ்சது நல்லா வருவார்னு.




இயக்குனர் சங்கம் நடத்தின *D40* பங்க்ஷன்லதான் எனக்கு அவரு அறிமுகமானார். ரொம்ப ஹியூமரான ஆளு. ரொம்ப எக்ஸ்ட்ரானரி பர்பாமெர்




நல்ல பையன்

தொடர்புக்கு
நிர்வாக ஆசிரியர் N.மூர்த்தி
9500074478




என் கேரியர் ஸ்டார்ட்டிங்க்கு பிள்ளையார் சுழினா அது சௌத்ரி சார்தான். வாழ்நாளில் நான் மறக்க முடியாத அற்புதமான மனிதர்




அவரைப் பற்றி சொல்லிக்கிட்டே இருக்கலாம். டம்மி வரிகள் போட்டே கவிஞர்களுக்கு டப் கொடுப்பவர். கவிதையான மனிதர். இசையால் நம் மனச கட்டிப்போட்டுருவார்




நிறைய இன்ஸ்ட்மென்ஷ் வாசிக்க தெரிந்த ஒரு நல்ல கம்போசர். ஒரு மாஸ்டர் தான். இப்ப நான் எடுத்துட்டு இருக்கிற **தேசிங்கு ராஜா2** படத்துக்கு **எக்ஸ்ட்ரானரியா ஒரு சாங் கொடுத்திருக்கிறார்.**




அதை பண்ணுவார் இத பண்ண மாட்டார்னு இல்லை. எல்லாவிதமான சாங்கயும் பண்ணுவாரு. என் டெம்போ தெரிஞ்சு ஒர்க் பண்ணி கொடுப்பார்.




நீங்க ஜட்ஜ் பண்ண முடியாது. ட்யூன்ல ஒன்னு பண்ணுவார். பைனல் சாங்ல வேற ஒன்னு பண்ணி கேட்கும் போது மிரட்டுவார். இப்படி எல்லாம் இந்த சாங்க பண்ண முடியுமான்னு யோசிக்க வைத்து விடுவார்.




ஒரு டிஃபரண்டான பர்சன். ஆகச்சிறந்த அறிவாளி. மூணு பேட்டன்ல சாங் கொடுத்துடுவார் என்று பதில் அளித்தார்.

சினிமா உலகில் தொடர்ந்து இயங்குவது என்பதே பெரிய சாதனை என்று பெரும்பாலானோர் சொல்லும் வேளையில், கடந்த 25 வருடங்களாக film யுகத்திலும், இப்போதைய Digital சினிமா யுகத்திலும் வெற்றிகரமாக பயணிப்பதோடு தனக்கென ஓர் தனி காமெடி பாணியை உருவாக்கி இளைஞர்களை கவர்வதோடு மட்டு மல்லாமல், memes கிரியட்டர்களின் templateல் அவரது தனித்துவமான நகைச்சுவை காட்சிகள் அலங்கரித்து கொண்டே இருப்பதால், சமூக ஊடகங்களில் அவரது படைப்பு மீண்டும் மீண்டும் கொண்டாடப் பட்டுக்கொண்டே இருக்கிறது. **இனிவரும் படைப்புகளிலும் அவரது trademark காமெடி தொடர திரைமொழி சினிமா மாத இதழ் வாழ்த்துகிறது.**

திரை மொழி TALKIES
Thiraimozhi Talkies




# உயர்ந்த மனிதர் எங்க இயக்குநர்

## இயக்குநர் T.தமிழ்வாணனின் நெகிழ்ச்சியானஉரை

**இன்ஃபினிட்டி கிரியேஷன் B. ரவிச்சந்திரன்** சார்பில் இயக்குநர் எழில் அவர்களுக்கு **எழில்25** என்ற சிறப்பு விழாவும், **தேசிங்குராஜா2** படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இயக்குநர் எழில் அவர்கள் இயக்கிய படத்தின் கதாநாயகர்கள், கதாநாயகிகள், தயாரிப்பாளர்கள், இசையமைப்பாளர்கள், அவரிடம் பணிபுரிந்த உதவி இயக்குநர்கள், மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள், நண்பர்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பித்தனர்.

இந்த விழாவில் இயக்குநர் எழில் அவர்களிடம் உதவியாளராக இருந்து இயக்குநராக மாறி, **கள்வனின் காதலி, மச்சக்காரன், நந்தி** ஆகிய படங்களை இயக்கியும், **தற்பொழுது இந்தியில் அமிதாபச்சன், எஸ்.ஜே சூர்யாவை வைத்து உயர்ந்த மனிதன் என்ற படத்தை இயக்கிக் கொண்டிருக்கும் T. தமிழ்வாணன்** அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு பேசியதாவது:

டைரக்டர் (எழில்) டைரக்டர் ஆவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அவரிடம் நான் உதவியாளராக சேர்ந்தேன். அப்போதுதான் அவரு துள்ளாத மனமும் துள்ளும் படத்தோட கதையை பல தயாரிப்பாளர்களிடமும், பல நடிகர்களிடமும் சொல்லி வந்தார்.. நான் தான் கூட்டிகிட்டு போயிட்டு வருவேன். அவர் கதை சொன்ன எல்லா இடத்திலும் கதை சூப்பர்... extraordinaryன்னு சொல்லுவாங்க ஆனா வேற, வேற காரணத்தால படம் இயக்குவது மட்டும் தள்ளி போய்கிட்டே இருந்தது. நீங்க கற்பனை பண்ணி பார்க்க முடியாத ஹீரோக்களிடமெல்லாம் கதை சொன்னாரு ஆனா படம் பண்ண லேட் ஆயிட்டே இருந்தது. அப்ப அவரோட ஃப்ரெண்ட் துபாய்ல இருந்தாரு.

இப்படியே போய்கிட்டு இருந்தா இது சரிப்பட்டு வராதுன்னு நினைக்கிறேன்.. நான் துபாய் போலாம்னு பிளான் பண்ணிட்டேன்னு அவர் மனசுல இருந்தத என்கிட்ட சொன்னாரு.

நான் துபாய் போறேன்.. ஆனா, நீ ரெண்டு மூணு வருஷமா என் கூடவே இருந்துட்டே அதனால நான் போறதுக்கு முன்னாடி உன்னைய ஒரு நல்ல இயக்குநர் கிட்ட உதவியாளரா சேர்த்து விட்டுட்டு போறேன் கவலைப்படாதேன்னு சொன்னாரு.

அப்ப எனக்கு தோணுச்சு... அட இந்த சூழ்நிலையிலும் இவரு நம்மள பத்தி யோசிக்கிறாருன்னு. இப்படி இயக்குநர் ஆகுறதுக்கு முன்னாடியே மனசால உயந்த மனிதரா இருந்தவரு எங்க டைரக்டர். இந்த சம்பவத்தை என்னால் மட்டும் தான் சொல்ல முடியும் (தனக்கு நேர்ந்த நேரடி அனுபவம் என்பதால்).

மேலும் அந்த நிகழ்வில் பேசிய பொழுது, இன்னொரு சுவாரசிய சம்பவத்தையும் நினைவு கூர்ந்தார்.

**துள்ளாத மனம் துள்ளும் படத்தோட சூட்டிங் ஸ்பாட்ல** படத்தோட கதைப்படி விஜய் சாரோட அம்மா இறந்து போயிடறாங்க அதுக்காக அவர் பாத்ரூம்ல போய் அழுற மாதிரி ஒரு சீன்.. அந்த பாத்ரூம், ஒரு செட். அப்ப நான் கிளாப் அடிச்சுட்டு இருந்தேன். பக்கத்துல விஜய் சார் என் தோள் மேல கை போட்டுட்டு இருந்தாரு. அது ஒரு சின்ன இடங்கறதுனால அதுல பொசிஷன் எல்லாம் சொல்லிட்டு டைரக்டர் ஒரு ஓரமா நின்னாரு. அப்ப விஜய் சார் டைரக்டர் கிட்ட, நீங்க ஒரு தடவை அதை பண்ணி காமிங்க அப்படின்னு கேட்டுக்கிட்டாரு. உடனே டைரக்டர் ஒரு பர்பாமென்ஸ் பண்ணி காமிச்சாரு. செட்ல இருந்தா எல்லாரும் கிளாப் பண்ணாங்க. அப்ப, **விஜய் சார் ஒரு நிமிஷம் டைரக்டரை பார்த்துட்டு, உங்க அளவு நான் பண்ண முடியுமான்னு தெரியல ஆனா நான் ஒன்னு பண்றேன் பாருங்கன்னு சூப்பரா பண்ணினார்.** அந்த சீன் தியேட்டர்ல ரசிகர்களால் பெருசா கொண்டாடப்பட்டது.



# மக்கள் இசையில் திரை இசையும் கர்நாடக இசையும்





வணக்கம் நண்பர்களே சென்று இதழின் தொடர்ச்சியாக மக்கள் இசை பாடல்களின் உயிர்ப்பு என்றால் அது மனித உணர்வை பிரதிபலிப்பதாக மட்டுமே உள்ளது

ஒரு மனிதனின் தன் இயல்பான உணர்தலின் மூலமாகதான் வாழ்கின்ற மண், மண் சார்ந்த மக்கள், மக்களுக்கு உதவுகின்ற உயிரினங்கள், தொழிற்சாதனங்கள், இயற்கை என்று பாகுபாடு இல்லாது பகுத்துண்கின்ற பண்பைபரிவைதன்பாடலின்வழியே சமூகத்திற்கு கடத்துகிற அந்தப் பாங்கு வேற எந்த இசைகளிலும் இல்லை என்றே கூறலாம்

அதேசமயம் திரை இசையில் கிராமிய பின்னணி கொண்ட கதைகளுக்கு மட்டுமே பயன்படுத்தி வந்த மக்கள் இசை "1970"களில் கதை நாயகன் அல்லது கதை நாயகியின் கனவுக்கான களம் கிராமிய பின்னணியாகவும், அதற்கான பாடல் மக்கள் இசை பாடலாகவும் மாறத் தொடங்கியதில் இருந்து அதிகப்படியான மண்மனம் சார்ந்த பாடல்கள் வெளிவரத் தொடங்கியது என்பதே உண்மை

**திரை இசையை பொறுத்தவரை மெல்லிசை, வல்லிசை, கிராமிய இசை** என்று மூன்று தலங்களிலும் தன்னை புதுப்பித்துக் கொண்டே இருக்கின்ற காரணத்தால் தான் இன்று திரை இசை பற்றிய ஒரு ஆய்வுக் கட்டுரை விரிவடைந்து கொண்டிருக்கிறது,

காரணம்: நாடகம் என்பதன் வடிவம் நடிப்பு,பாட்டு, வசனம், என்ற மும்முனை பதிவை அப்படியே பரிணாம வளர்ச்சிக்கு எடுத்துக் கொண்டு பயணித்தாலும், திரைப் படங்களைப் பொறுத்தவரை இசையும் காட்சிப்படுத்தலுமே முன்னேற்கிறது,

நமது திரை இசை அமைப்பாளர்களில் கிராமிய மணம் கமழும் இசை பாடல்களின் வெற்றிவாகை சூடியவர்கள் நிறைய பேர் இருந்தாலும், கர்நாடக இசையை தழுவிய பாடல்களிலிருந்து, மெல்லிசையில் உருவான கிராமிய பாடல்களைத் தந்தவர் என்ற மகுடத்திற்குரியவர் **எம் .எஸ் விஸ்வநாதன்** அவர்களே!

அதைத் தொடர்ந்து... அவரின் வழியே வந்தாலும், தனக்கென ஒரு புதிய பாணியில் திரை இசையில் **"கிராமிய இசையை மெல்லிசை"என்று புதிய பரிமாணத்தை உருவாக்கியது இசைஞானி இளையராஜாவையே சாரும், திரைத்துறை காலத்தை இளையராஜாவுக்கு முன், இளையராஜாவுக்கு பின், என்று இரண்டாக பிரித்துப் வேண்டுமென்றே கருதுகிறேன்** ஆம்: நாம் வெகு சாதாரணமாக கேட்டு மகிழ்ந்த கிராமிய பாடலான

"யானைவர்றத பாருங்கடி" "யானை அசைஞ்சு வர்றத பாருங்கடி" என்ற கும்மி பாடலை...

இயக்குனர் இமயம் "பாரதி ராஜாவின்" இயக்கத்தில் உருவான **"அலைகள் ஓய்வதில்லை"** என்ற படத்தின் மூலமாக **ஆயிரம் தாமரை மொட்டுக்களே வந்து ஆனந்த கும்மிகள் கொட்டுங்களே** என்று கர்நாடக இசை பின்புலம் கொண்ட கதை நாயகன் விச்சுவிற்கும், மேற்கத்திய இசையை பின்புலமாக கொண்ட கதையின் நாயகி மேரிக்குமான காதலை சொல்ல கிராமிய இசையில் பாடல் அமைக்கப்பட்டு அதை வெற்றி பெறச் செய்த இசையமைப்பாளர் என்றால் நம் இளையராஜா மட்டுமே என்று கூறினால் அது மிகையில்லை.

இங்கிருந்து தான் இளையராஜா என்ற மாபெரும் இசைக் கலைஞன், மண் சார்ந்த இசையமைப்பாளராகவும், மண் சார்ந்த இசை பாடகராகவும் இசைக்கவிஞராகவும் தன்னை விஸ்வரூபடுத்திக் கொண்டார் என்றால் அது இன்னும் மிக பிரமிப்பாக பார்க்க முடிகிறது

**"இளையராஜா" என்ற "பஞ்சாட்சர மந்திரத்தின்"**

**ஓம்காரத்தை உலகம் முழுவதும் உள்வாங்கி, உச்சரித்து,உபச்சரித்துக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில்....**

அவரது மடியில் தவழ்ந்த மயில் போல பொண்ணு, குயில் போல பேச்சு, அடங்கிப் போனதே என்பது இளையராஜா என்ற தம்புராவின் ஒரு தந்தி அருந்த நிலை,

ஆம்: ஒரு அழகிய குரலுக்குச் சொந்தமான "பாடகி பவதாரணி" அவர்களை இழந்தது இளையராஜாவுக்கு மட்டுமல்ல... இசை ரசிகர்களுக்கும், இசை உலகினருக்கும், பேரிழப்பாகவே கருதுகிறேன் அவரின் ஆன்மா சாந்தியடைய இசையான இறைவனை வேண்டிக் கொள்வோம், வாழ்க அவர் புகழ்!

ஒரு கலைஞன் தன்னை முழுமையாக தன் கலைக்கு அர்ப்பணித்துள்ளான் என்பதற்கு ஆதாரமே அவனின் குழந்தைகளும் அவனது கலை ஞானத்தோடு பிறக்கும் என்பதை விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்ட உண்மை. அப்படி இளையராஜாவின் மூன்று குழந்தைகளும் இசையின் வழிதோன்றல்களாக திகழ்வது அவர் ஒரு முழுமையான இசை மரபுக் குரிய அருளாளர் என்றும், அவர் நமது மண் சார்ந்த மனிதர் என்பதிலும், நமக்கான வரலாற்று பெருமை இருக்கிறது,

**அவரின் விரல்களால் உச்சரித்த ஸ்வரங்கள் 90% "கிராமிய மெல்லிசை" "மெல்லிசை கிராமியம்" என்ற பாடலுக்கான மெட்டுக்களே... எனவே தான் அவர் திரை இசைக்கான துலாபாரமாக வைத்துப் பார்க்க நினைக்கிறேன்.**

இமு" (இளையராஜாவுக்கும் முன்) "இ - பி" (இளையராஜாவுக்கு பின்) என்ற திரை இசைக்காலத்தில் "தமிழ் திரையிசையில்"

ஹிந்தி பாடல்களின் ஆதிக்கமே மிகுதியாய் ஊடுருவி இருந்த காலம்

அதை "இ - பி"யில் ஹிந்தி வாசனையே இல்லாத வண்ணம் முழுக்க, முழுக்க மண் சார்ந்த இசையை வைத்து தனது இராஜாங்கத்தை அமைத்துக் கொண்டவர் என்ற தனிப் பெரும்பான்மை அவரையே சாரும், சாதாரணமாக தனது அண்ணன் பாவலர் வரதராஜன் அவர்களின் பாடலுக்கு ஹார்மோனியம் வாசித்து உதவி கொண்டிருந்த ராசையா திடீரென இளையராஜாவாக விஸ்வரூபம் எடுத்தது என்பது ஏதோ நேற்று நினைத்து, இன்று நடந்தது அல்ல...

அவரது இளமைக்கால ஆசைகள், கனவுகள், கொண்டாட்டங்கள், விருப்பு, வெறுப்புகள், அனைத்தையும் மூட்டையாய் கட்டி ஒரு மூலையில் வைத்து விட்டு ஒரு துறவியின் வாழ்க்கை பயணம் பயணித்து, கர்நாடக இசை, மேற்கத்திய இசை, கிராமிய இசை, ஹிந்துஸ்தானி இசை, என்று இசையின் அத்துனை பரிமாணங்களையும் கற்று,

பியானோ ரீடுகளில் ஒவ்வொரு ஓசையையும், நரம்பு வாத்தியங்களின் ஒவ்வொரு அதிர்வுகளையும்,

காற்று வாத்தியங்களின் ஒவ்வொரு துளை மொழிகளையும், தாள வாத்தியத்யங்களின் ஒவ்வொரு சொல் அளவுகளையும், மிகத் துல்லியமாகவும், மிகத் தீர்மானமாகவும், தனது குருதியின் ஒவ்வொரு அணுவுக்குள்ளும் பதிவு செய்து வைத்திருக்கின்ற நமது" இசைஞானி" "இளையராஜா வை"...

**"கலைவாணியின்" "பிரதம சீடன்" என்றே இங்கே பதிவு செய்கிறேன் அந்த "இசை பீஷ்மரை" இந்த இதழில் மட்டும் கூறி முடித்துவிட முடியுமா என்ன?** எனவே, அவரின் தனியாத இசை தாகத்தின் ஊற்று, மண் சார்ந்த இசையாக ஊற்றெடுத்தது பற்றி தொடர்வோம் அடுத்த இதழில் நன்றி வணக்கம்



**பழனி.ஞானசக்திவேல்** M.A. இசை.,

Designed by : Balaji Design Lab
9789870307



# திரைமொழியில் காதல்மொழி



காதல் என்ற மூன்று எழுத்து வார்த்தை இன்றளவும் இளமையாக இருப்பதற்கு காரணம் சினிமா என்ற மூன்று எழுத்து வார்த்தை என்றால் அது மிகையல்ல...

சினிமாவுக்கும் காதலுக்குமான தொடர்பு சொல்லில் அடங்காதது. கோழியிலிருந்து முட்டை வந்ததா இல்லை முட்டையிலிருந்து கோழி வந்ததா போன்று, சினிமாவில் இருந்து காதல் வந்ததா அல்லது காதலில் இருந்த சினிமா வந்ததா என்பதும் ஒரு கேள்விக்குறியான கேள்வியே... காதலும் சினிமா என்ற காவியமும் மட்டும் தான் எப்பொழுதும் இளமையாக காட்சியளிக்கும்... சினிமாவுக்கும் காதலுக்குமான தொடர்பை நாம் அத்தனை எளிதாக கடந்து போக முடியாது ஏனென்றால் நீங்கள் ஒரு சிறந்த படத்தை உருவாக்க வேண்டும் என்றால் ஒன்று உங்கள் வாழ்வில் ஒரு காதலை கடந்து வந்திருக்க வேண்டும்; இல்லை என்றால் சினிமாவை காதலியாக நேசிக்க தெரிந்திருக்க வேண்டும்.. இங்கு ஒரு ஆண் மட்டும் நினைத்தால் ஒரு பெண்ணை சுலபமாக காதலிக்க முடியும்... ஆனால் ஒரு பெண் நினைத்தால் மட்டுமே அந்த காதலை முழுமையான காதலாக மாற்ற முடியும்... அதேபோல் இங்கு எந்த துறையை சார்ந்தவர்களையும் சினிமா என்ற தேவதையை காதலிக்க முடியும். ஆனால் ஆனால் அந்த தேவதை யார் காதலை ஏற்றுக் கொள்கிறளோ அவர்களால் மட்டுமே திரைப்படம் என்ற காவியத்தை உருவாக்க முடியும்..

எதற்கு இவ்வளவு விளக்கம் என்று யோசிக்கிறீர்களா? **இந்த மாதம் காதலர் தின மாதம்..** வித்தியாசமான காதல் திரைப்படங்களை இங்கே வரிசைப்படுத்தி உள்ளோம்... வழக்கமான காதல் அல்லாமல் காதலில் வேறு ஒரு பரிணாமத்தை காட்டிய முக்கியமான திரைப்படங்களை பற்றி பார்ப்போம்.

## பிரணயம்

2011 ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு மலையாள திரைப்படம். மோகன்லால், அனுபம் கெர், ஜெயப்பிரதா முக்கிய கதாபாத் திரங்களின் நடித்த இந்த திரைப் படத்தை பிரபல மலையாள இயக் குனர் பிலெஸ்ஸி இயக்கி உள்ளார்.

உடல்நலமற்ற கணவனுடன் வாழும் தன் முன்னாள் காதலிக்கு வயதான காலத்தில் ஒரு நண்பனாக உதவி செய்யும் ஒரு முன்னாள் காதலனின் கதை... காதல் கதை களிலேயே இது மிகவும் வித்தியாச மான ஒரு திரைப்படம்.. காதலிக்கு சொந்தமான கணவனுக்கு கூட நாம் அன்பாக இருக்க வேண்டும், நண்பனாக இருக்க வேண்டும், என்று ஒரு முன்னாள் காதலன் யோசிக்கும் விதத்தில் அமைத்துள்ள **இந்த திரைக்கதை காதல் கதைகளிலேயே மிக முக்கியமான ஒரு திரைப்படம்..** இந்த திரைப்படத்தின் முடிவும் யாரும் எதிர்பார்க்காத வகையில் இருக்கும்

## செம்மீன்

தகழி சிவசங்கரப் பிள்ளை 1956ல் எழுதிய ஒரு ஒரு நாவலை மையமாக வைத்து எடுத்த திரைப்படம்...








இது இந்து மத மீனவனின் மகள் கருத்தம்மைக்கும் ஒரு முஸ்லிம் மீன் வியாபாரியின் மகன் பரீக்குட்டிக்கும் இடையேயான காதலைப் பற்றிய கதையாகும் இதன் மையக்கருவானது தென்னிந்தியாவின் கேரள மாநிலத் தின் கடலோரத்தில் வசிக்கக்கூடிய மீனவ சமுதாய மக்களின் இடையே உள்ள நம்பிக்கை பற்றியது. அந்த நம்பிக்கையானது கற்பு பற்றியது அதாவது மனைவி ஒருவர் தன் சமுதாயத்தின் இறைவன் ஆன கடலுக்கோ கணவனுக்கோ துரோகம் கொண்டவராக இருந்தால் அவ ருடைய கணவன் கடலுக்குச் சென்றால் கடல் தெய்வம் அவரை விழுங்கிவிடும் என்ப தாகும். இந்த நம்பிக்கையை தொடர்ந்து நிலைநிறுத்தச் செய்யும் வகை யிலேயே தகழி சிவசங்கரப் பிள்ளை இந்தக்கதைய எழுதியிருப்பார். **சாகித்ய அகாடமி விருதினை பெற்ற இந்த புத்தகத்தை திரைப்படமாக வடிவமைத்து ஒட்டுமொத்த உலகையும் மலையாளத் திரை உலகை திரும்பி பார்க்க வைத்த** படம் விமர்சன ரீதியாகவும், வணிக ரீதியாகவும் வெற்றி பெற்றது.1966ல் சிறந்த திரைப்படத்திற்கான இந்திய அரசின் தங்கத் தாமரை விருது கிடைத்தது

## லஞ்ச் பாக்ஸ்..

வாழ்க்கையில் விரக்தி உச்சத்தில் வாழும் ஒருவர் தான் பணி புரியும்




அலுவலகத்தில் யாருக்கோ போக வேண்டிய உணவு தவறுதலாக தனக்கு வரும் வேலையில் அதை சாப்பிட தொடங்குகிறார் சுவையின் உச்சத்திற்கே போகும் அந்த உணவை தனக்கு தினமும் தருமாறு அதே லஞ்ச் பாக்ஸில் ஒரு பேப்பரில் எழுதி வைத்து கொடுக்கிறார்.. தவறுதலாக கிடைத்தாலும் தான் சமைக்கும் உணவை விரும்பி சாப்பிடும் ஒரு மனிதர் இந்த உலகில் இருக்கிறார் என்பதை தனிமையில் வாடும் பெண்மணி புரிந்து கொண்டு அவருக்கு தினமும் அதே போன்று சமையலை அனுப்பி விடுகிறார்.. சமைக்கும் **சமையலை அனுப்பும் அந்த லஞ்ச் பாக்ஸில் தான் இருவரது உரையாடல்களும் பேப்பரில் எழுதி அனுப்புகிறார்கள்..** ஒரு **கட்டத்தில் இவர்கள் காதலர்களாக மாறுகிறார்கள்.** ஆனால் சூழ்நிலை அவர்களை ஒன்று சேர்த்ததா என்பது இந்த திரைப்படத்தின் கதை.. பின்னணி இசை இல்லாமல், மிக நேர்த்தியாக, தெளிவான ஒரு திரைக்கதை, மற்றும் காதலில் ஒரு புதுவிதமான காதலை காட்சிப்படுத்தி இருக்கிறார்கள். வித்தியாசமான காதல் படங்களை பார்ப்பவர்களுக்கு இது மிக முக்கியமான ஒரு திரைப்படம்

- தொடரும்...



- வி. கார்த்தி குமார்
எழுத்தாளர் இயக்குநர்

# அகிராகுரசேவா கட்டிய திரைக்கோட்டை







**ரஷமோன்** குலை வெளிவந்த கையோடு வாழை இறந்துபடுவது போல இயற்கையின் சில நியதிகள் பலசமயங்களில் நம் முதுகில் குத்துவதாகவே இருக்கிறது. நல்ல சிறுகதை எழுதுகிறவர்கள் நாற்பதாவது வயது வரும் போது அவர்களாகவே படுத்துக்கொண்டு கண்ணை மூடி நிம்மதியாய் மண்ணில் புதைந்து விட வேண்டும் என்பதும் அப்படி ஒரு விதி. இந்த விதிக்கு உட்பட்டு இறந்த பல எழுத்தாளர்களில் ஒருவர் தான் ஜப்பானை சேர்ந்த ரியோன்ஸுகே அகுட்கவா (Ryūnosuke Akutagawa)

**ஜப்பானிய சிறுகதை உலகின் தந்தையான இவர் எழுதிய இரண்டு சிறுகதைகள்தான் ரஷமோன் எனும் மாகாவியம் உருப்பெற அடிப்படை காரணம்.** அதில் ஒன்றுதான் 1914ல் அகுட்கவாவினால் எழுதப்பட்ட "இன் எ குரோவ்" எனும் சிறுகதை. இதுகுறித்து பின்னாளில் ஒரு பேட்டி ஒன்றின் போது பதிலளித்த குரசேவா, "அகுட்குவாவின் இக்கதை மனித மனங்களை கீறிக் கீறி ஆராய்ந்து கொண்டே செல்கிறது. அது நமக்கு வெளிப்படுத்தும் பயங்கரத்தை என் பார்வையாளனுக்கு சொல்ல நினைத்தேன். ரஷமோன் எனக்குள் பெரும் மன அவசத்தை உண்டாக்கியதற்கும் இதுவே மூலக்காரணம்", எனக் கூறியிருந்தார்.

அப்படிப்பட்ட இக்கதையை இவருக்கு முதன் முதலாக எடுத்துச் சொல்லி அதற்கான திரைக் கதையுடன் முதலில் குரசேவாவிடம் கொண்டுவந்தவர் ஷினோபு கஷிமொட்டோ (Shinobu Hashimoto). இவர் குரசேவாவின் நண்பர். அவரோடு **இகிரு, இடியட்** போன்ற படங்களில் இணை திரைக்கதையாளனாக பங்கு வகித்தவர். அவர் தந்த திரைக் கதை குரசேவாவுக்குள் மெல்ல ஒரு சலனத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது. அடுத்தபடம் என்ன என்ன என நச்சரித்த தயாரிப்பாளரிடம் இதுதான் கதை என கூறி அனுமதியும் பெற்றுவிட்டார்.

**பன்னிரெண்டாம் நூற்றாண்டை கதைக் களமாக கொண்ட இக்கதை ஒரு சாமுராய் வீரன், அவனது மனைவி, ஒரு வழிப்பறித் திருடன் மற்றும் ஒரு மரவெட்டி ஆகிய நான்கு கதாபாத்திரங்களையும் உடன் ஒரு கற்பழிப்பு மற்றும் கொலை எனும் இரண்டு சம்பவங்களையும் பின்னணியாகக்கொண்டு கதை கட்டமைக்கப்பட்டிருந்தது.**

கதைக்குள் ஆழம் பூடகத்தன்மை, நாடகியம் என அனைத்தும் இருந்தாலும் திரைக்கதையாக குரசேவாவுக்குள் இது முழுதிருப்தி அளிக்கவில்லை.

கதைக்குள் இருக்கும் மர்மத்தை காட்சி ரூபமாக உணர்த்த இன்னும் ஏதாவது சேர்த்தால்தான் திரைக் கதையில் கூடுதல் ஆழமும் பரிணாமமும் கிட்டும் என்பதை உணர்ந்தார். அதன் பிறகு இருவரும் இதற்கான இணைகதையை தேடிய போதுதான் **அவர்களுக்கு கிடைத்தது மற்றொரு சிறுகதை. அந்த கதையின் தலைப்புதான் ரஷமோன்.**

ரஷமோன் என்றால் கோட்டை வாயில். பிரம்மாண்டமான அந்த கோட்டைவாயிலில் மழைக்கு ஒதுங்கும் மூன்றுபேர் தங்களுக்குள் சமீபத்தில் நடந்த, தாங்கள் சாட்சிகளாக பங்கேற்ற ஒரு கொலை வழக்கை பற்றி பேசிக் கொண்டிருக்கின்றனர். இதனூடே, பிரம்மாண்டமான அந்த கோட்டைவாயிலும் அதன்மீது பொழிந்து வழியும் பேய் மழையும் இதர இரு பாத்திரங்களாக ஆசிரியரால் வருணிக்கப்பட்டிருந்தன.

இந்த கோட்டையும், மழையும், கதையின் உட்பொருளை உணர்த்துவதாக இருக்க இதனை முதல் கதையாகவும் அகுட்கவாவின் முதல்கதை "இன் எ குரோவ்" கதையை ப்ளாஷ் பேக்கிலும் வைத்து இருவரும் கொஞ்சம் கொஞ்சமாக செதுக்க துவங்க குரோசவா எனும் இயக்குநரின் கனவில் பிரம்மாண்டமாக விரியத்துவங்கியது ரஷமோன்.

திரைப்படம் பேய் மழையிலிருந்து துவங்குகிறது. ரஷமோன் எனும் பிரம்மாண்டமான நுழைவாயிலில் மழை கொட்டுகிறது. அதன் இண்டு இடுக்குகளில் மழை சீறிப் பாய்கிறது. நுழைவாயிலை ஒட்டிய மண்டபத்தில் நான்கைந்து குடியானவர்கள் தஞ்சம் புகுந்து பேசிக்கொள்கின்றனர். அப்போது, இருவர் தாங்கள் நேரில் கண்ட விசாரணையை வியப்புடன் இன்னொருவனுக்கு சொல்ல துவங்குக்கின்றனர்.. விசாரணைக் கூடம் காண்பிக்கப்படுகிறது.

வழிப்பறிதிருடன் ஒருவன், கொல்லப்பட்ட சாமுராய், சாமுராய் வீரனின் மனைவி, வழிப்போக்கனாக இவை அனைத்தையும் கண்ட மரவெட்டி ஆகியோரின் சாட்சியங்களின்வழி அவரவர் கொலையை பற்றி விவரிக்கின்றனர். இதில் கொலையுண்ட சாமுராய் வீரனின் சாட்சியம் ஆவி உருவில் அவனது மனைவியின் வாயிலாக காண்பிக்கப்படுகிறது. ஒரு சம்பவத்துக்கு ஒரு உண்மைதான் இருக்க முடியும்.

ஆனால், இங்கோ, அவரவர் கொலையை அவரவர் கோணத்தில் விவரிக்கின்றனர். நால்வர் சொல் வதும் நம்பக்கூடியதாகத்தான் இருக்கிறது. ஆனால், ஒருவர் சொல்வதற்கு முற்றிலும் தலைகீழான உண்மையாகவும் இருக்கிறது. இறுதியில் யார் சொல்வது உண்மை என கடைசி வரை தெரிந்து கொள்ள முடியாமல் படமும் முடிகிறது. ரஷமோன் எனும் பிரம்மாண்ட கட்டிடமும், மழையும் அனைத்திற்கும் சாட்சிகளாக நடந்த சம்பவங்களை கேட்டும் கேளாமல் நின்றுக் கொண்டிருக்கிறது.

**அதுவரை, ஜப்பானிய சினிமாவில் இல்லாத உள்ளழுத்தமும் பூடகமும் வெளிப்பாடாற்ற தன்மையுமாக அகிரா குரோசாவா இப்படத்தை இயக்கிருந்தார். இதனாலேயே ஜப்பனிய திரைப்பட உலகம், இத்திரைப் படத்தை அதன் ஆரம்ப நிலையிலிருந்தே நிராகரித்து வந்தது. தயாரிப்பாளர்கள் கதையில் நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது தெளிவாக இல்லை என குறை கூறினர்.**

அகிராவிடம் உதவி இயக்குநராக இருந்தவர்கள் கூட திரைக்கதையின் பலம் குறித்து போதிய புரிதல் இல்லாமல் படப்பிடிப்பிலிருந்தே விலகிக்கொண்டனர். இப்படி பலராலும் ரஷமோன் வெறுக் கப்பட்டதற்கு காரணம் படத்தில் திட்டமான ஒரு வரிக் கதையில்லை. கதை பார்வையாளனின் யோசனைக்கு தள்ளப்படுகிறது. இதற்கு முன், இப்படியான திரைக்கதைகள் அவர்களது அனுபவ உலகத்தில் இல்லாதால்தான் இதெல்லாம் ஒரு கதையா என சுண்டு விரலால் அதனை ஒதுக்கித் தள்ளினர்.

**ஆனால், குரசேவா திட்டமாக இத்திரைக்கதையை நம்பினார். கதையின் ரகசியம்தான் திரைக் கதையின் வெற்றி. அது பார்வையாளனுக்கு தெளிவாக கூற வேண்டிய அவசியமில்லை. காட்சிகளின் மூலம் அவனது ஆழ்மனத்தில் உணர்த்தினால் போதுமானது என குர சேவா நம்பினார். இதனாலேயே படத்தில் இடம்பெறும் பிரம்மாண்டமான் நுழை வாயிலுக்காக குரசேவா மிகவும் மெனக்கெட்டார். தனது கற்பனையை விட அது பிரம்மண்டமானதாக இருக்கவேண்டும் என விரும்பினார்.**

பல புத்த கோவில்களுக்கு சென்று இறுதியில் ஒன்றை தேர்வு செய்தார். புராதன நகரமான கியோட்டோவின் வடக்கு மூலையிலிருந்த நுழை வாயில் அவரை மிகவும் கிளர்ச்சியுற செய்தது. பின் அது போன்ற ஒன்றை நிர்மாணிக்கும் படி தன் கலை இயக்குநர்களுக்கு அவர் கட்டளையிட அது அதனையும் விட பிரம்மாண்டமானதாக அமைந்து காட்சிக்குள் ஒரு புதிர்த்தன்மையை இயல்பாக வடித்து தந்தது.

> தொடர்ச்சி 8ஆம் பக்கம்



# ஏ.ஐ.யில் குரல் குளோனிங் ஏஆர். ரகுமான். கார்த்திக் ராஜா

**நல்ல திரைக்கதை என்பது வார்த்தைகளற்ற வடிவம் என்றார், இசையமைப்பாளர் கார்த்திக் ராஜா.**

கார்த்திக்கை அவருடைய வீட்டில் சந்தித்து கைகுலுக்கியபோது, பழகுவதற்கு நேரமாகும் என நினைத்தேன். ஆனால் எடுத்த எடுப்பிலேயே ஃப்ரீ ஸ்டைலா போகலாம் என பல்லவியை முணுமுணுத்துக்கொண்டு நண்பராகிவிட்டார். அடுத்து கீபோர்டில் மெட்டை பதிவு செய்யும்போது "டின்னருக்கு பீட்சா ஆர்டர் பண்ணவா?" என்று மேலும் நெருங்கி வந்துவிட்டார். அவருக்குள் எக்கச்சக்க நகைச்சுவை உணர்வு. வரிசையாக சில நகைச்சுவை ஸ்க்ரிப்டுகளை விவரித்துவிட்டு. கூடுமானவரை வசனங்கள் குறைவாக உள்ள படங்கள் பண்ணனும் என்றார். **அவருக்குள் ஒரு கதாசிரியரும் இயக்குநரும் இருக்கிறார்கள்.** அவரே எழுதிய வசனங்கள் தேவைப்படாத காட்சிகள் சிலவற்றை விவரித்தார். சில திரைக்கதைகளையும் ஆர்வ மாகக் கூறினார். இயக்குநராக வேண்டும் என்கிற அவருடைய ஆசை நிறைவேறினால் சில வித்தியாசமான ஸ்க்ரிப்டுகளை தமிழ் சினிமா பார்க்கும் என்பதற்கு நான் உத்தரவாதம்.

கார்த்திக்கை சந்திப்பதற்கு முன் இந்தப் பாடலை எப்படி இசையமைக்கலாம் என்று ஒரு ஏ.ஐ செயலியிடம் யோசனை கேட்டிருந்தேன். அது பற்றி அவரிடம் தெரிவித்தேன். ஓ உங்களுக்கு ஏ.ஐயில் ஆர்வம் இருக்கா? அப்படின்னா நான் உங்களுக்கு இதைக் காண்பிக்கிறேன் **என தன்னுடைய லேப்டாப்பை தட்டினார். அசந்து போனேன். செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி அவர் உருவாக்கியிருந்த குரல்களும், படங்களும், வீடியோக்களும் வரிசையில் வந்தன. எனக்கு பத்துக்குப் பத்துரூம் இருந்தா போதும் இந்த லேப்டாப்பிலேயே படம் எடுத்துவிடுவேன் என்றார்.**

அவருக்கிருக்கும் ஏ.ஐ பரிச்சயம் முற்றிலும் நான் எதிர்பாராதது. வியப்புடன் ஏன் உங்கள் ஏ.ஐ படைப்புகள் பற்றி நீங்கள் வெளியே சொல்லவே இல்லை எனக் கேட்டேன். இதுவரைக்கும் சொல்லணும்னு தோணல. இனி மேலும் சொல்வேனா எனத் தெரியவில்லை என்றார். ஆனால் இந்தக் கட்டுரை வழியாக நான் உங்களுக்குச் சொல்லிவிட்டேன். **கார்த்திக்ராஜா இசையமைப்பாளர் மட்டுமல்ல. அவர் ஒரு கதாசிரியர், இயக்குநர் மற்றும் ஏ.ஐ வல்லுனர்.**

கார்த்திக்ராஜா பத்து வருடங்களுக்கு முன்பே ஒரு மேடை நாடகத்தை எழுதி இயக்கி அரங்கேற்றியிருக்கிறார். அதில் நடித்தவர்கள், நாடகத்தின் பெயர், அது எங்கே நடந்தது உள்ளிட்ட தகவல்களை கடைசிப் பாராவில் குறிப்பிடுகிறேன்.

திமிரி எழுடா பாடலில் பம்பா பாக்யா, ஷாகுல் ஹமீது ஆகியோரின் ஏ.ஐ குரல்களை கேட்டுவிட்டு, இப்படியே போனால் என் தாத்தா பாட்டியின் குரல்களையும் பாட வைத்துவிடலாமா என்றார் நண்பர். அவர்கள் ஏற்கனவே பேசிய ஆடியோ இருந்தால் பாட வைத்துவிடலாம். **கலைஞர், மோடி, எஸ்.பி.பி, ஷாகுல் ஹமீது, எனது அல்லது உங்கள் குரலைக் கேட்டு, பிரதி எடுக்கும் முறைக்கு *RVC* என்று பெயர். *Retrieval based voice cloning* என்பதின் சுருக்கம்.**

குளோனிங் செய்ய வேண்டிய குரலை குறைந்தபட்சம் பத்து நிமிடத்துக்கு பதிவு செய்து கொள்ள வேண்டும். பிறகு அந்தக் குரலை ஏ.ஐயிடம் சமர்பித்தால் அது முதலில் அதனை தனித் தனி ஒலித் துண்டுகளாக வெட்டுகிறது.பிறகு ஒவ்வொரு துண்டாக கேட்டு அதில் உள்ள உச்சரிப்பை உள் வாங்கிப் பதிவு செய்து கொள்கிறது. இது சிக்கல் இல்லாமல் நிறைவேறிவிட்டால் ஏ.ஐ குரல் தயார் என்று அர்த்தம். இது போல பல பிரபலங்களின் ஏ.ஐ குரல்களை என்னைப் போன்ற ஆர்வலர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அவற்றை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ள லிங்கும் தருகிறார்கள். பல சூப்பர் ஹிட் பாடல்கள் வெவ்வெறு பாடகர்களின் குரல்களில் நிறைய உலா வருவதற்கு இந்த இலவச சேவை ஒரு காரணம். எஸ்.பி.பி இரசிகர்கள் அவரது குரலை லேட்டஸ்ட் பாடலுக்கு மாற்றி உலவவிடுகிறார்கள். ஆனால் எஸ்.பி.பி குடும்பத்தார் எங்கள் அனுமதியின்றி எப்படி எஸ்.பி.பியின் குரலை குளோனிங் செய்யலாம் என்று அவர்கள் மேல் வழக்கு தொடுக்க முடியும்.

ஆனால் **இரகுமான் லால்சலாம் இதனை முறையாக எப்படிச் செய்ய வேண்டும் என்று நமக்கு வழிகாட்டியிருக்கிறார். லால் சலாம் படத்தில் தனது நண்பர் சாகுல் ஹமீது மற்றும் பம்பா பாக்யா ஆகிய இருவரது குரல்களையுயும் ஏ.ஐ குரல்களாக மாற்றி "திமிரி எழுடா" என்ற பாடலை லால் சலாம் படத்துக்காக உருவாக்கியிருக்கிறார்.** ஆனால் முறைப்படி பாடகர்களின் குடும்பத்தாரிடம் அனுமதி பெற்று, அவர்களின் குரல்களை பயன்படுத்தியதற்காக ஒரு தொகையையும் கொடுத்திருக்கிறார். எனவே டெக்னாலஜியை பயன்படுத்தினாலும் முறைப்படி அறத்துடன் செய்ய வேண்டும் என்பதில் அவர் தெளிவாக இருக்கிறார்.

**நானும் ஏ.ஆர்.இரகுமானைப் பின்பற்றி அவர் வழியிலேயே கவியரசு கண்ணதாசன் அவர்களின் குரலை ஏ.ஐ குரலாக மாற்றி இருக்கிறேன்.** அவரது குரலை, யாதெனக்கேட்டேன் படத்திற்காக, ஒரு பாடலிலும் பயன்படுத்தியிருக்கிறேன். ஆனால் இதைச் செய்வதற்கு முன் திரு. அண்ணாதுரை கண்ணதாசன் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து அதற்கு முறைப்படி அனுமதி பெற்றேன். பாடல் உருவானதும் அதை அவருக்கு போட்டுக் காட்டினேன். அவர் சில திருத்தங்கள் சொன்னார். அவற்றை சரி செய்துவிட்டேன். விரைவில் கண்ணதாசன் குரலில் யாதெனக்கேட்டேன் பாடலைக் கேட்கலாம்.

இந்த வரியை துவக்கும்போது சென்னை வளசரவாக்கத்திலிருந்து கேரளாவிற்கு வந்துவிட்டேன். பல மாதங்களுக்கு முன்பே திட்டமிட்டிருந்த குருவாயூர், திருச்சூர் பயணம். குடும்பத்தினரும் வந்திருந்த தால் அவ்வப்போது ஆன்மிகச் சுற்றுலா போல உணர்ந்தேன். கேரளா என்பது தேவதைகளின் தேசம். குருவாயூர் கோவிலுக்குள் ஆண்கள் சட்டை அணிய அனுமதியில்லை. விபரமறிந்த வெளியூர்காரர்கள் மேலாடையாக அங்கவஸ்திரம் அணிந்து கொள்கிறார்கள். உள்ளூர் சேட்டன்கள் சட்டையின் ஒரு பக்கம் மட்டும் கையை நுழைத்துக் கொண்டு மறுபாதியை அப்படியே தொங்க விடுகிறார்கள். நான் உடன் வந்த நண்பரின் அங்கவஸ்திரத்தை (திருப்பித் தராத) கடனாகப் பெற்று அணிந்து கொண்டேன். ஆனால் குருவாயூர் கோவில் வழிநெடுக கேரளாசாரியில் பெண்கள் வசீகரித்தார்கள். குறிப்பாக ஒரு இளம் தம்பதியினர் வசீகரித்தார்கள். இருவரும் சராசரியை தாண்டிய உயரம். நான் இராமகிருஷ்ணா லஞ்ச் ஹோம் வாசலில் காபிக்காக காத்திருந்தபோது ஈரம் சொட்டிக்கொண்டிருந்த அவளுடைய கூந்தலில் அவன் பூச்சூடிக் கொண்டிருந்தான். அவள் செல்ஃபி காமிராவில் பார்த்துவிட்டு ஏதோ திருத்தங்கள் சொன்னாள். அவன் மீண்டும் அணிவித்தான். மீண்டும் செல்ஃபி காமிரா, மீண்டும் திருத்தம் என நான் காபி குடித்து முடிக்கும் வரையில் அவன் அவளுக்கு பூச்சூடிய படலம் நடந்தது. தேவதைகள் காதலன்களை கொஞ்சும் விதம் அழகு! மிக இயல்பான ரொமான்ஸ்! இருவரும் மிட்ஜர்னி உருவாக்கிய அழகிய ஏ.ஐ ஓவியம் போல இருந்தார்கள்.

என்னுடன் வந்திருந்த நண்பர் ஒரே ஹலோவில் புது நட்புகளை உருவாக்கிக் கொள்வார். குருவாயூரிலும் ஒருவரை நண்பராக்கிக் கொண்டார். புது நண்பர் சீனாவிலும், இந்தியாவிலும் தொழில் முறையாக பயணிப்பவர். ஏ.ஐ ஆர்வலர். குருவாயூர்

> தொடர்ச்சி 8ஆம் பக்கம்



தமிழ் அகம் ஒரு நடுநிலை ஊடகம்
தொடர்புக்கு : 9467 208 208

7ஆம் பக்கம் தொடர்ச்சி

கோவிலோடு நெருங்கிய தொடர்பிருப்பதாக அறிமுகம் செய்துகொண்டார். தற்சமயம் குருவாயூர் கோவில் தொடர்பாக ஒரு பக்திப் படத்தை ஏ.ஐ பயன் படுத்தி தயாரிக்கப்போகிறார். கேரள சூப்பர் ஸ்டார்கள் நடிக்கப் போகிறார்கள். இது தவிர மன்னர்கள் காலத்து ஓவியங்களையும், மற்ற படைப்புகளையும் ஏ.ஐ பயன்படுத்தி பாதுகாக்கவும் திட்டமிட்டிருக்கிறார். அவருடன் வாட்சப் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. நான் உருவாக்கிய ஏ.ஐ படங்கள் பிடித்திருப்பதாகச் சொன்னார். சேர்ந்து பயணிப்போம் எனக் கூறியிருக்கிறார். அவர் எனக்களித்த உறுதிகள் நிறை வேறும்போது அவர் யார் என்று சொல்கிறேன்.

அவசரம் அவசரமாக முதல் பாராவிலிருந்து கடைசி பாராவுக்கு தாவியவர்களுக்காக இந்த டிவிஸ்ட். கடைசி பாராவில் நீங்கள் தேடிய தகவல் இருக்காது. ஆனால் ஒரு க்ளூ! கார்த்திக்ராஜா அரங்கேற்றிய மேடை நாடகத்தின் பெயரில் ஏற்கனவே ஒரு திரைப்படம் வந்திருக்கிறது. படத்தின் நாயகன் தென்னகத்து ஜேம்ஸ்பாண்ட் ஜெய்சங்கர், நாயகி புன்னகை அரசி கே.ஆர். விஜயா

இந்த வாரம் நெட்பிளிக்சில் நான் பார்த்த படங்களின் டாப் 6.

அனிமல் (விட்டு விட்டு), குண்டூர் காரம் (ஓட்டி ஓட்டி), ஹாய் நானா (ஜன்னலோரம் அமர்ந்து), சலார் (சோர்ந்து அயர்ந்து), சொசைட்டி ஆஃப் த ஸ்நோ (வியந்து), தி ஆடம் பிராஜக்ட் (மீண்டும்)

**விஜய் அரசியலுக்கு வந்துவிட்டார். இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? எல்லா பிரஸ்மீட்டிலும் அனைத்து திரைப்பிரபலங்களிடமும் தற்போது கேட்கப்படுகிற கேள்வி.** விஜய் தேர்தலில் நிற்கும் வரை இந்தக் கேள்வி தொடரும். ஆனால் பிரபலங்கள்தான் பாவம்! என்ன பதில் சொல்வது என திக்குமுக்காடுகிறார்கள். அல்லது மேலோட்டமாக வரவேற்கிறேன் எனச் சொல்லி நகர்கிறார்கள். புகழின் உச்சத்தில் இருக்கும்போது தனது முதல் அரசியல் அறிவிப்புடன் தனது கடைசிப் படத்தையும் அறிவித்துவிட்டார் விஜய். இது மிகவும் துணிச்சலான முடிவு. அதற் காக விஜய்யை நிச்சயம் பாராட்ட வேண்டும். ஆனால் இது சரியான முடிவு தானா என்பதை காலம்தான் நமக்குச் சொல்லும். சினிமாவில் விஜய்க்கு வெற்றியை தேடித்தந்த இரசிகர்கள் அவருக்கு அரசியலிலும் வெற்றியை தேடித்தருவார்களா என்பது விடை தெரியாத கேள்வி. ஆனால் எப்போதுமே விடை தெரியாத கேள்விகள்தான் வாழ்வின் சுவாரசியம். தமிழ்நாடு ஒரு சுவாரசியத்துடன் காத்திருக்கிறது.

கார்த்திக்ராஜா பற்றி புதிரை இந்த பாராவிலேயே அவிழ்த்துவிடுகிறேன். சென்னை மியூசிக் அகாடமியில் அவர் அரங்கேற்றிய மேடை நாடகத்தின் பெயர் **பட்டணத்தில் பூதம். நாசர் மற்றும் நாசரின் மகன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளார்கள்.** எழுத்து, இசை, இயக்கம், தயாரிப்பு என நான்கு முக்கிய பொறுப்புகளுடன் தினசரி ரிகர்சல், அதற்காக நடிகர்களை ஒரே நேரத்தில் திரட்டுவது என மேலும் பல பொறுப்புகளை ஒரே நேரத்தில் சுமந்தது மிகக் கடினமாக இருந்தாகக் குறிப்பிட்டார். அதற்குப் பின் நாடகத்தை தொடர்ந்து அரங்கேற்றாததற்கு அதுவே காரணம் என்றும் கூறினார்.

**திரைத்துறையினருக்கு பயன் படக்கூடிய ஏ.ஐ செயலிகள் என்று ஒரு பட்டியல் தரலாம் என்றிருக்கிறேன். இவை எல்லாமே நான் பயன்படுத்தியவை.**

*Runway ML, Wonder Studio, Elev en Labs, Adobe Firefly, Adobe Podcast, Creative Reality Studio, Kive ai, Move. ai, Descript, Imagine 3D*

இவற்றை பயன்படுத்தி ஆடியோ, படங்கள், வீடியோக்களை உருவாக்கலாம், எடிட் செய்யலாம், டப்பிங் செய்யலாம், பகிரலாம். அவற்றின் திறன் என்ன என்பதை நீங்களே கூகுள் செய்து தேடி பயன்படுத்திப்பாருங்கள். தேடல் நன்று! தேடித் தேடி கற்போம்!



ISR. செல்வகுமார்
ஏ.ஐ நிபுணர், திரைப்பட இயக்குநர்




6ஆம் பக்கம் தொடர்ச்சி

படப்பிடிப்பு முழுவதும் முடிந்து **திரைப்படம் 1950ல் வெளியானபோது ஜப்பனில் பலரும் கடுமையாக எதிர்த்தனர்.** ஜப்பானியர்கள் தத்துவங் களை காட்டிலும், வாழ்க்கையையும் உறவுகளையுமே அதிகம் நேசிக்கின்றனர்.

ஆனால் யாருக்கும் புரியாத இத் திரைப்படம் குரசேவாவுக்கு மேற்கு நாடுகளின் கலாச்சாரத்தின் மீதான ஈடுபாட்டையே காண்பிக்கிறது என பொறிந்து தள்ளினர். **ஆனால் படத்தை பார்த்த ஒரு இத்தாலிய ஆசிரியர் ஒருவர் இப்படத்தை இத் தாலியின் வெனிஸ் திரைப் படவிழாவுக்கு பரிந்துரை செய்தார். ஆனால், ஜப்பான் அரசாங்கமோ குரசேவாவை விட எங்களின் இயக்கு நரான ஒசு தான் எங்கள் வாழ்க் கையை திறம்பட சொல்கிறார் அவரது படத்தை வேண்டுமானால் அனுப்புகிறோம் என முரண்டு பிடித்தது.**

இப்படியாக பல பிரச்னைகளை கடந்து இப்படம் இறுதியாக போட்டியில் கலந்து கொள்ள, **இறுதியில் விழாவின் சிறந்த படத்துக் கான தங்க சிங்கம் விருது இப் படத்துக்கு வழங்கப்பட்டது.**

அன்று அரங்கில் எழுந்த பலத்த கைதட்டலுடன்மேடையில்உயர்ந்தது குரசேவா எனும் பெயர் மட்டுமல்ல போரினால் உருக்குலைந்த ஜப்பானி யர்களின் மனோதிடமும் உறுதியும் தன்னம்பிக்கையும் தான். அதே போல **ரஷமோனுக்கு பிறகுதான் உலக அரங்கில் ஜப்பான் சினிமாவுக்கு முக்கியத்துவம் கிடைக்க துவங்கியது.**

தொடர்ந்து அமெரிக்காவிலும் இன்னும் பல படவிழாக்களில்லும் கலந்து கொண்டு இத்திரைப் படம் பரிசுகளை அள்ளிக்குவித்துக் கொண்டே இருக்க குரசேவா உலகின் தலை சிறந்த இயக்குநர்களில் ஒருவராக குறுகிய காலத்தில் அறியப் பட்டார்.

**ரஷமோன் திரைப்படத்திற்கு கிடைத்த பெருமைகளுக்கு அதன் திரைக்கதை மட்டுமே காரண மல்ல. மாறாக அதன் ஒளிப் பதிவும், படத்தொகுப்பும் சப்த ஒருங்கிணைப் பும் கதாபாத்திரங்களின் நடிப்பும் மிக முக்கிய காரணிகளாகும். குறிப்பாக ஒளிப்பதிவில் ரசம் பூசப்பட்ட கண்ணாடிமூலம் வெளிச்சத்தை நடிகர் களின் முகங்களில் பிரதிபலைக் கச்செய்யும் உத்தி முதன் முதலாக இப்படத்தில்தான் அறிமுகப் படுத்தப் பட்டது. அதே போல சூரியனை நேரடியாக காமிராமூலம் படம் பிடிதத்தும் இப்படத்தில்தான் முதல் முறை.**

படத்தில் வழிப்பறி திருடனாக நடித்த மிஃபுனே குரசேவாவின் நிரந்தர நாயகனாக தொடர்ந்து நடித்து வந்தார். ஒரு முறை படப்பிடிப்பினூடே குரசேவா குழுவினருடன் மார்டின் மற்றும் ஓசா ஜான்சன் ஆகியோர் இயக்கிய ஆப்ரிக்கா எனும் படத்தை பார்த்துக்கொண்டிருந்தார். அதில் ஒருகாட்சியில் சிங்கம் ஒன்று நடந்து போக உடனே மிபுனே என கத்தினார் குரசேவா .மிபுனே குரசேவாவை திரும்பிபார்க்க அதோ திரையில் நடக்கும் சிங்கத்தை பார். நம் படத்தில் நீ இது போலதான் நடக்க வேண்டும் என உத்தரவிட மிபுனேவுக்கு அந்த நிமிடமே மூக்கின் கீழ் மீசை சிலுப்பிக்கொண்டு உருவெடுக்க துவங்கியது. படத்தில் மிபுனேவின் உடலில்கட்டுதெறிக்கும் அசாத்திய முறுக்குக்கெல்லாம் பின்னணியாக குரசேவாவின் இந்த கட்டளைதான் இயங்கியது. ஒரு நடிகனுக்குள் இயக்குநர் எவ்வளவு ஆழமாய் ஊடுருவ முடியும் என்பதற்கு இச்சம்பவம் ஒரு சிறந்த உதாரணம். அவசியம் பார்க்க வேண்டிய படம்.



பாக்கியராஜ் பரசுராமன்
செங்கொடி குறும்படம் இயக்குநர்
தொடர்பு எண் 9884834905



தொடர்புக்கு
நிர்வாக ஆசிரியர் N.மூர்த்தி
9500074478

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI.** Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**